DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, SIVAGANGAI.

| | |
|---|---|
| Calender<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | Case No. CC . 64/2018 |
| Deposition of Witness for | Prosecution Pw 5 |
| Name | செல்வம் |
| Father / Husband Name | பிச்சை |
| Village | |
| Taluk | சிவகங்கை |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the date of 24th July 2023.

------------------------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை:

நான் வாணியங்குடியில் குடியிருந்து வருகிறேன். மின்சாரவாரியத்தில் தற்காலிக பணியாளராக வேலை செய்து வருகிறேன். கடந்த 12.10.2015ம் தேதி மதியம் 01.30 மணியளவில் நானும், என் மாப்பிள்ளை அ.சா.4 சசிக்குமார் என்பவரும், சிவகங்கை டூ மானாமதுரை மெயின் ரோடு, கீழவாணியங்குடி, கல்லறை சுடுகாடு முன்பாக வந்துகொண்டிருந்த போது அந்த இடத்தில் விபத்து நடந்தது சம்பந்தமாக பார்வையிட சிவகங்கை நகர் காவல் நிலையத்திலிருந்து போலிசார் வந்திருந்தனர். எங்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தனர். டைப் செய்து பிரிண்ட் எடுக்கப்பட்ட பார்வைமகஜரில் நானும், செல்வம் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் சம்பவ இடத்தில் வைத்து எங்கள் முன்னிலையில் தயார் செய்தவை தான். அ.சா.ஆ.3 பார்வை மகஜரில் உள்ள 2வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். என்னுடன் சேர்த்து முதலாவதாக சசிக்குமார் சாட்சி கையொப்பம் செய்தார். போலிசார் என்னை விசாரித்தனர்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:

மாரிமுத்து எனக்கு என்ன உறவு என்றால் மாமா முறை. சாட்சி முருகேஸ்வரி எனக்கு என்ன உறவு என்றால் எனக்கு அக்கா முறை. விபத்து சம்பந்தமாக எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். விபத்து எப்போது நடந்தது என்ற விபரமும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். விபத்து நடந்து எத்தனை நாட்கள் கழித்து போலிசார் சம்பவம் இடம் வந்து மகஜர் தயார் செய்தனர் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரி தான்.

போலிசார் பார்வைமகஜரை எப்போது டைப் செய்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் வைத்து தான் டைப் செய்தார்கள். யார் டைப் செய்தது என்றால் போலிசார். மொத்தம் எத்தனை போலிசார் இருந்தனர் என்றால் 3 போலிசார். அதில் என்ன டைப் செய்யப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. தற்சமயம் மறந்துவிட்டது.

நான் மாரிமுத்துவின் உறவினர் என்பதால் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்ட பார்வை மகஜரில் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(ஒம்)திருமதி.J.அனிதா கிறிஸ்டி, 24.07.2023
**நீதித்துறை நடுவர் எண்.1,**
**சிவகங்கை.**

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.1,
சிவகங்கை.